| **UG–CN–1016** | **BLTN–11** |
|---|---|

U.G. DEGREE EXAMINATION —
DECEMBER 2023.

தமிழ்

First Year

இக்கால இலக்கியம்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி — அ ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளுக்குள் விடை தருக.

அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்கள்.

1. பாரதியின் சென்னை வாழ்க்கை குறித்து எழுதுக.

2. நல்வாழ்வு வாழ்தல் எப்போது எளிமையாகும்?

3. கவிச்சக்கரவர்த்தி நாடகத்தில் தனி மொழியின் இன்றியமையாமை குறித்து எழுதுக.

4. கயிற்றரவு எனும் சிறுகதையின் கதைக்கரு யாது?

5. குமாரசாமியின் பகல்பொழுது புதினத்தின் கதைக்கரு குறித்து எழுதுக.

பகுதி — ஆ ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்குள் விடை தருக.

அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

6. ஜீவாவின் "கோடிக்கால் பூதம்" கவிதையின் உள்ளடக்கம் குறித்து எழுதுக.

7. அருணகிரியாரும் பெண் உலகமும் குறித்து எழுதுக.

8. தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டு நாடகங்கள் குறித்து எழுதுக.

9. புதுமைப்பித்தனின் படைப்புகளில் மனித முரண் என்பதை விளக்குக.

10. குமாரசாமியின் பகல் பொழுது புதினத்தின் படைப்பு நுட்பங்கள் பற்றி விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன

11. பாரதிதாசனின் பாடல்களில் மேலேங்கியிருக்கும் பொதுவுடைமை நாட்டத்தினை நும்பாடப்பகுதி கொண்டு விவரி.

12. கவிஞர்கள் சுட்டும் சுற்றுப்புறச் சூழல் பாதிப்புகளும் அதற்கான தீர்வுகளும் குறித்து விளக்கியெழுதுக.

13. மு.வ, வின். மொழிநடை குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. கவிச்சக்கரவர்த்தி : நாடகக் கூறுகள் குறித்து விவரித்தெழுதுக.

15. தமிழில் சிறுகதை இலக்கியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

16. புதுமைப்பித்தனின் படைப்புலகம் குறித்து நும் பாடப்பகுதி கொண்டு மதிப்பிட்டெழுதுக.

17. குமாரசாமியின் பகல்பொழுது புதினம் காட்டும் சமுதாயம் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

———————

**UG-CN-1017** **BLTN–12**

# U.G. DEGREE EXAMINATION — DECEMBER 2023.

தமிழ்

First Year

இலக்கணம் - I நன்னூல் எழுத்து, சொல்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளில் விடை தருக. அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

1. பொதுப்பாயிரம் என்றால் என்ன?

2. வேற்றுமைப் புணர்ச்சி என்றால் என்ன?

3. மெய்யீற்றின் முன் உயிர் புணர்தலுக்குச் சான்றுகள் எழுதுக.

4. மூவிடப் பெயர்களை எழுதுக.

5. வினாக்களின் வகைகளை எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளில் விடை தருக. அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

6. நூலின் பத்துவகை அழகுகள் குறித்து எழுதுக.

7. உயிரீற்றின் முன் வல்லினம் புணருமாற்றைச் சான்றுகளுடன் விளக்குக.

8. எகின் எனும் சொல் புணர்தலுக்குரிய விதிகளைச் சான்றுகளுடன் எழுதுக.

9. வினைப்பாகுபாடு குறித்து விளக்குக.

10. அன்மொழித் தொகை என்றால் என்ன? சான்று காட்டி விளக்குக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளில் விடை தருக. அனைத்து வினாக்களுக்கும் சம மதிப்பெண்களைக் கொண்டுள்ளன.

11. நூலின் உத்திகள் குறித்து நன்னூலார் குறிப்பிடுவனவற்றை விவரி.

12. எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

13. மெய்யீற்றின் முன் மெய் புணருமாற்றைச் சான்றுகளுடன் விவரி.

14. வேற்றுமை என்றால் என்ன? அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. வினைச்சொல் வகைகளைச் சான்றுகளுடன் விளக்கியெழுதுக.

16. பொருள்கோள் பற்றிக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

17. குறிப்பால் பொருள் உணர்த்தும் இடைச்சொற்கள் குறித்து விவரி.

———————

| UG-CN-1018 | BLTN-13 |
|---|---|

## U.G. DEGREE EXAMINATION – DECEMBER 2023.

தமிழ்

First Year

மொழியியல்

Time : 3 hours     Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளுக்குள் விடை தருக.

1. வகையொலி என்றால் என்ன? சான்று தருக.

2. ஒலியழுத்தத்தின் வகைகள் யாவை?

3. இரண்டாம் வேற்றுமை உணர்த்தும் பொருள் குறித்து எழுதுக.

4. தமிழில் உள்ள இறந்தகால இடைநிலைகள் யாவை? சான்று தருக.

5. ஆகுபெயர் என்றால் என்ன? சான்று தருக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்குள் விடை தருக.

6. தமிழ்மொழியின் ஒலியளவு குறித்து விளக்குக.

7. அடிச்சொற்களின் வகைகளைச் சான்று காட்டி விளக்குக.

8. தமிழ் மொழியில் பால்பாகுபாடு குறித்து எழுதுக.

9. வினைச்சொல் அமைப்பு குறித்து விளக்குக.

10. மங்கல வழக்கு, இடக்கரடக்கல், குழூஉக்குறி-சான்றுகளுடன் விளக்குக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளுக்குள் விடை தருக.

11. தமிழில் உயிரொலிகள் தோன்றி வளர்ந்த வரலாற்றை விவரி.

12. சொல்லின் திரிபுக்கான காரணங்கள் மற்றும் இயல்புகளை விளக்கியெழுதுக.

13. சொல்பாகுபாடு குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. வேற்றுமை பற்றிய மு.வ. கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

15. சொற்பொருள் மாற்றங்கள் குறித்து விவரி.

16. எண்ணுப்பெயர்கள் குறித்துச் சான்றுகள் காட்டி விளக்குக.

17. தமிழ்ச் சொற்றொடர் அமைப்பினை மு.வ. வழிநின்று விவரி.

| UG-CN-1019 | BLTN-14 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION – DECEMBER 2023.

தமிழ்

First Year

தமிழ் கற்பித்தல்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — ($3 \times 3 = 9$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 100 வார்த்தைகளுக்குள் விடை தருக.

1. கலைத்திட்டத்தில் தாய்மொழித் தமிழ் பெறும் இடம் குறித்து எழுதுக.

2. நுண்ணிலைக் கற்பித்தல் என்றால் என்ன?

3. உரைநடைக் கற்பித்தலின் பயன்கள் யாவை?

4. விளையாட்டு முறை கற்றலின் நன்மைகள் யாவை?

5. திறன்மிக்க சொற்பொழிவை மேற்கொள்வதற்கான வழிகள் குறித்து எழுதுக.

பகுதி ஆ — ($3 \times 7 = 21$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஐந்து வினாக்களில் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கு 200 வார்த்தைகளுக்குள் விடை தருக.

6. நடிப்பு முறையில் தமிழ் கற்பித்தல் முறைகள் குறித்து விளக்குக.

7. படிக்கும் திறனைக் கற்பிக்கும் இரு வழிமுறைகள் குறித்து எழுதுக.

8. கட்டுரைப் பாடம் கற்பித்தலின் தேவைகள், விதிமுறைகள் பற்றி விளக்குக.

9. விதிவிளக்கு முறையின் நிறை, குறைகளை விளக்குக.

10. எல். புளூம் குழுவினரின் கல்விக் குறிக்கோளின் வகைகள் குறித்து எழுதுக.

பகுதி இ — ($4 \times 10 = 40$ மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் ஏழு வினாக்களில் இருந்து ஏதேனும் நான்கு வினாக்களுக்கு 500 வார்த்தைகளுக்குள் விடை தருக.

11. தமிழ் கற்பிக்கும் முறைகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. நிரல்வழிக் கற்றலின் படிநிலைகள் மற்றும் அதன் சிறப்பம்சங்கள் குறித்து விளக்கியெழுதுக.

13. பள்ளி நூலகத்தின் பகுப்பும் மொழியாசிரியரின் கடமையும் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

14. கல்வித் திட்டத்திற்கும், பாடத்திட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகள் பற்றி விளக்கியெழுதுக.

15. தாய்மொழியைக் கற்பதால் ஏற்படும் பயன்கள் குறித்து விவரி.

16. மொழிபெயர்ப்புப் பற்றிய பாரதியின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

17. எழுதுந்திறனை வளர்ப்பதற்கான பயிற்சிகள் குறித்து விவரித்தெழுதுக.

| UG–CN–1020 | BLTAN–11 |
|---|---|

# U.G. DEGREE EXAMINATION — DECEMBER 2023

தமிழ்

First Year

தமிழக வரலாறும் பண்பாடும்

Time : 3 hours Maximum marks : 70

பகுதி அ — (3 × 3 = 9 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு மட்டும் 100 சொற்களில் விடையளி

1. தமிழக வரலாற்றை அறிவதற்கான புதைபொருள் சான்றுகள் யாவை?

2. களப்பிரர் என்பவர் யார்?

3. ரேனாட்டுச் சோழர்கள் என்போர் யாவர்?

4. மார்க்கோபோலோவின் பயணக் குறிப்புகள் தரும் செய்தி யாது?

5. மூக்கறுப்புப் போர் அல்லது இரண்டாவது மைசூர்ப் போர் பற்றியச் செய்திகளை எழுதுக.

பகுதி ஆ — (3 × 7 = 21 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களில் மூன்று வினாக்களுக்கு மட்டும் 200 சொற்களில் விடையளி

6. சங்ககால அரசுகள் குறித்து விளக்குக.

7. நரசிம்மவர்மனின் ஆட்சிகாலம் குறித்து விளக்குக.

8. சோழர் ஆட்சியின் சரிவுக்கான காரணங்கள் பற்றி விளக்குக.

9. திருமலை நாயக்கரின் ஆட்சி முறை குறித்து விளக்குக.

10. விடுதலைக்குப் பிந்தைய இலக்கிய வளர்ச்சி குறித்து எழுதுக.

பகுதி இ — (4 × 10 = 40 மதிப்பெண்கள்)

எவையேனும் ஏழு வினாக்களில் நான்கு வினாக்களுக்கு மட்டும் 500 சொற்களில் விடையளி

11. தமிழக வரலாற்றினை அறிவதற்கான அடிப்படைச் சான்றுகள் குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

12. தமிழகத்தின் இயற்கையமைப்பு குறித்து விளக்குக.

13. பல்லவர் காலச் சமுதாய மாற்றங்கள் குறித்து விவரித்தெழுதுக.

14. ‘சோழர்கள் காலமும் தமிழ்ச் சமுதாய வளர்ச்சியும்’ குறித்துக் கட்டுரை ஒன்றினை எழுதுக.

15. பிற்காலப் பாண்டியர்களின் ஆட்சிமுறை குறித்து விவரி.

16. விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு குறித்து விளக்கியெழுதுக.

17. விடுதலைக்குப் பிந்தைய தமிழகத்தின் கலை, இலக்கியம், பண்பாட்டு, சமூக, அரசியல் நிலைகள் குறித்துக் கட்டுரை ஒற்றினை எழுதுக.